# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி-2 | தி.பி. 2015 | மேழம்-19 (22-4-84) | 65 காசு | இதழ் எண்: 37 | பகுதி-16-18


# தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடு!

## இந்தியாவில் தேசிய இனங்களின் விடுதலை மாநாடு!

**இடம் : பெண்ணாகடம் (தெ.ஆ.)** **காலம் : மே 5, 6 பக்கல்களில்**

**மே 5 : தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடு**

தலைமை : தோழர் **ஏ. எம். இப்ராகிம்**
(மக்கள் சனநாயக உரிமைக் கழகத் தலைவர்)

**மே 6 : இந்தியாவில் தேசிய இனங்களின் விடுதலை மாநாடு**

தலைமை : தோழர் **புலவர் கலியபெருமாள்**
(இந்தியப் பொதுவுடைமை கட்சி, [மா-லெ] மக்கள் போர்)

**மாநாட்டு விளக்கப் பொதுக்கூட்டம்**

தலைமை : தோழர் **தர்மலிங்கம்**
(முற்போக்கு இளைஞர் அணி, தென்னார்க்காடு)

**சிறப்புரை :**

தோழர் புலவர் **கலியபெருமாள்**
(இ.பொ.க., [மா-லெ], மக்கள் போர்.)

திரு. **வே. ஆனைமுத்து**
(பெரியார் சம உரிமைக் கழகம்)

" **பெருஞ்சித்திரனார்**
(உலகத் தமிழின முன்னேற்றக்கழகம்)

தோழர் **என். இராமச்சந்திரன்**
(ஆசிரியர்-'காம்ரேட்', கேரளா)

" **ஏ. எம். இப்ராகிம்**
(ம.ச.உ.க. தலைவர்)

" **கிருட்டிணன்(பிள்ளை)**
(குமரி மாவட்டம்)

" **நாகராசன்**
(சிறப்பாசிரியர், 'மார்க்சியம் இன்று')

தோழர் **மனோகரன்**
(செ.ன்னை)

" **குணா**
(தமிழக ஆய்வரண்)

தோழர் **தட்சிணாமூர்த்தி**
(மு.இ.அ., சென்னை)

" **வேலு**
(மு.இ.அ., வடார்க்காடு)

" **சீவகன்**
(மு.இ.அ., தருமபுரி)

" **ஆ. சீனிவாசன்**
(தொழிற்கழகத் தலைவர், சென்னை)

" **தமிழ்ச்செல்வன்**
(மு.இ.அ. தென்னார்க்காடு)

" **இராசேந்திரன்**
(மு.இ.அ.திருச்சி)

மற்றும், மணிப்பூர், கேரளா, கருநாடகம், பஞ்சாப், புதுதில்லித் தோழர்கள் பங்குபெறுவார்கள். 6-5 84 ஞாயிறு மாலை தோழர் பெண்ணாகடம் அரங்கசாமியின் தலைமையில் நடைபெறும் ஊர்வலத்திற்கும், மாநாட்டு விளக்கப் பொதுக் கூட்டத்திற்கும் அனைவரும் திரண்டிடுவீர். ஆதரவு நல்கிடுவீர்.

இன்னணம், **முற்போக்கு இளைஞர் அணி** திருச்சி-தென்னார்க்காடு மாவட்டங்கள்.

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல் பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

தொடர் : 8

# ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

## என் முதல் ஐரோப்பிய சுற்றுச் செலவு

மின்தொடர் வண்டி நிலையத்தின் உள் அமைப்புகளை வியப் போடும் மகிழ்ச்சியோடும் பார்த்துக் கொண்டே வளங்கோவுடன் விரைவாக நடந்தும், கழல் படிக்கட்டுகளில் இறங்கியும், சுரங்கப் பாதையின் கீழ்த்தளத்திற்கு வந்தேன். ;வண்டிகள் 10, 15 நிமையங் நிமையங்களுக்கு ஒருமுறையும், சில வேளைகளில் 7, 8 நிமையங் களுக்கு ஒருமுறையும் நகரை நோக்கியும், நகரிலிருந்து புறநகர் களை நோக்கியும் போய் வந்து கொண்டிருந்தன.

வண்டிகள் மிக மிக அமைப்பாகவும் அழகாகவும் இருந்தன. ஓடும்பொழுது சிறு அளவு ஒலியே கேட்கிறது. அதுவும் தொடர் வண்டிக்குரிய கட கட எனும் ஒலி கேட்பதில்லை. 'சிவ்'வென்னும் ஓர் இழுப்பு ஒலியே கேட்கிறது. வண்டிக்குள் அனைத்தும் மெத் திருக்கைகள். ஐரோப்பா முழுவதும் ஒரு வண்டியில்கூட பலகை

இருக்கைகளைப் பார்க் கவேயில்லை. உள்புற அமைப்புகள் வானூர்தி அமைப்பு களைப் போலவே உள் ளன. ஒளி நிரம்பிய விளக்குகள், விசிறிகள் இல்லை. இங்குதான் என்றில்லை: ஐரோப்பா முழுவதும் வீட்டிலும், கடைகளிலும், அலுவல கங்களிலும் வேறெங்கி லுமோ மின் விசிறிகள் இல்லை. அவற்றுக்கு எப்பொழுதுமே தேவையில்லை. நாடு முழுவதும் குளிர். எனவே வண்டிகள் ஓடும்பொழுது பலகணி களை யாருமே திறப்ப தில்லை. பலகணிகளின் கதவுகள் அனைத்தும் கண்ணாடிகள். கண்ணா டிகள் என்றால் நம், ஊர்ப்புறக் கண்ணாடி கள் இல்லை. கல்லால் அடித்தாலும் உடையாத கண்ணாடிகள்; தடிப்பமும் வாய்ந்தவை. பிரான்சைப் பொறுத்த அளவில் அதை ஒரு கண்ணாடி நகரம் என்றே சொல்லலாம். பெரிய பெரிய கட்டிடங்கள் முழுவதை யும் கண்ணாடிகளாலேயே கட்டியிருக்கிறார்கள்; பலகணிகள், கதவுகள், உட்புற, வெளிப்புறச் சுவர்கள், அறைகள், மிசைகள் முதலிய அனைத்தையும், நல்ல, தடிப்பமான உடையாத கண்ணாடி களாலேயே கட்டியிருக்கிறார்கள். சில பெரிய கட்டடங்களின் மேல் கூரைகளைக்கூட, கண்ணாடிகளால் கட்டியிருப்பதைப் பார்த்தேன்.

மின்வண்டிகளைப் பற்றிக் கூறி வந்தேன் அல்லவா. நிலையத் திற்குள் வண்டி வந்து நின்றதும், நிலைய மேடைக்கும் வண்டிக்கும் இடைவெளி அவ்வளவாக இலலாமல், வண்டிக் கூண்டின் தளம் மேடையின் தளத்துடன் பொருந்தி நிற்பதுபோல் அமைத்திருக் கிறார்கள். வண்டிகளில் நம் ஊர் வண்டிகளில் உள்ளவபோல், படிக்கட்டுகளே இல்லை. ஒரு படிகூட இல்லை. மேடைத்தளத் திலிருந்து நேராக வண்டிக்குள் காலை வைக்க வேண்டியதுதான். (இதைச் சொல்வது எளிது: செய்வது கடினம். எவ்வெவ் வகையில் அவர்கள் கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்பதற் காகவே இவற்றைச் சொல்லுகிறேன்.) இந்த அமைப்பால், படிக்கட்டுகளில் ஏறும்போது, கால் தவறுவதோ வண்டியின் கீழே, அஃதாவது வண்டிப் பாதைக்குள் விழுவதோ, வண்டிப் படிகட்டுகளில் நம் ஊர் மக்கள் போல் நின்று கொண்டோ, தொங்கிக் கொண்டோ வருவதோ இல்லாமல் போய்விடுகிறது இஃது எவ்வளவு முன்னெச்சரிக்கையான ஏற்பாடு என்பதை எண்ணிப் பார்த்தால் தெரியும்.

வண்டிக்குள் நுழைந்தவுடன் அனைவர்க்கும் இடம் கிடைக் கிறது. சில பொழுதுகளில், அலுவல் நேரங்களில் மக்கள் வீடு திரும்பும் மாலை, இரவு சமையங்களில் மட்டும் சிலர் நிற்க வேண்டியிருக்கும். ஆனால் அப்பொழுதுகளில்கூட, உடல் உறுப்புக் குறைந்தவர்களுக்காகவும் (அவ்வாறுள்ள ஒருவரைச கூட நான் பார்க்கவில்லை.) மிக முதுமையடைந்தவர்களுக்காகவும் ஒவ்வொரு கூண்டிலும், நுழைகதவுக்கு இடப்புறம் இரண்டு இருக்கை வரிசைகள் விடப்பெற்றுள்ளன. அவற்றில் வேறு எவரும் அமர்வ தில்லை. சில பொழுதுகளில் எவரேனும் அமர்ந்திருந்தாலும், அவ்விருக்கைகளுக்குரியவர்கள் வந்தால் உடனே அவர்கள் எழுந்து கொணடு, இடம் விட்டு விடுகிறார்கள். உட்கார்ந் திருப்பவர்களை, வந்த உரிமையர் எழச்சொல்வதையோ, அமர்ந்திருப்பவர் அதன் பின்னர் நீட்டி நெளிந்து எழுவ தையோ, நான் காணவில்லை. அவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு அங்கு இடமேயில்லை. வாய்கள் பேசவேண்டிய தேவையில் லாமல், செயல்கள் இயல்பாக நடைபெறும் மீமிசை மக்கட் பண்பாட்டை அங்குதான் கண்டு அகமகிழ்ந்தேன்! (பண் பாடுகள் என்று நாம் நினைத்துக் கொண்டு இருப்பதற்கும், இயல்பாக இருக்கவேண்டிய மாந்தப் பண்பாட்டின் படிநிலை வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாடுகளைப் பிறகு விரிவாக விளக்க இருக்கிறேன்.)

வண்டிக்குள் இருந்த அனைத்துப் பொருள்களும் வழவழப் பும் பளபளப்பும் உடையனவாகவே இருந்தன. வண்டிக் குள்ளோ நிலையத்திற்குள்ளோ, எந்த ஓரிடத்திலும் ஒரு சிறு துண்டுத் தாளோ, வெண்சுருட்டு (சிகரெட்டு)த் துண்டோ, பழத்தோலோ, எச்சில் கறையோ, மண்துகள்களோ (ஆம், துகள்கள்தாம்!) வேறு சில குப்பையோ கிடைப்பதைப் பார்க்க இயலாது. பயன்படுத்தப்பட்ட சீட்டுகளைக்கூட அவற்றுக்குரிய பெட்டிகளில் போட்டு விடுகின்றனர். அந்தச் சீட்டுகளை எடுத்துக் கொண்டுதான் வெளியில் வரமுடியாதே வெளிவரும்பொழுது இறுதியாக உள்ள வழிவிடு பொறியின் தொளைகளுக்குள் அவற்றைப் போட்டால்தானே, நம்மையே அது வெளியில் விடும். இல்லையானால் நம் சட்டையையோ, பையையோ, வேறு பொருள்களையோ பிடித்து இழுத்து நிறுத்திவிடும்! (அப்படித்தான் நம்முடன் வந்த பேராசை யாசிரியர், ஏற்கனவே பயன்படுத்திய ஒரு சீட்டைப் பொறி யின் தொளையில் போட்டுவிட்டு வெளியே வந்தபொழுது, அவர் கையில் தொங்கப்போட்டிருந்த பையை அது பிடித்து இழுத்துக் கொண்டு விட்டது என்று சிரித்துச் சொல்லிக் கொண்டு கிடந்தார்)

மின்வண்டி (மெட்ரோ) வந்து நின்றவுடன் அதன் அனைத்துக் கதவுகளும் திறந்து கொள்கின்றன. அப்பொழுது தான் ஆள்கள் இறங்கவோ ஏறவோ முடியும். இதனால், வண்டி நகர்ந்து கொண்டுள்ளபொழுது எவரும் இறங்கவும் இயலாது; ஏறவும் முடியாது. இதுபோலும் நேர்ச்சிகளால் அங்கு உயிரிழப்பதே இல்லை. கதவுகள் மூடிக்கொண்ட பின்தான் அங்கு வண்டியே புறப்படும். இனி, மெட்ரோ, வண்டிகள் அனைத்தும் சுரங்கப் பாதைகளுக்குள்ளேயே செல்வதால், அவற்றில் செல்லும்பொழுது நகர அமைப்பு களையே பார்க்க இயலாது. புறநகர் செல்லும் வண்டிகளில் செல்லும்பொழுதுதான் ஊர்ப் பகுதிகளைப் பார்க்க இயலும்.

நானும் வளங்கோவும் அன்று மாலை பாரிசு நகரின் சில பகுதிகளைப் பார்த்தோம். நகர அமைப்பு மிகவும் அழகாக வும், செப்பமாகவும், சிறப்பாகவும் இருக்கிறது. பாரீசு நகர வீதிகள் உலகப் புகழ் பெற்றவை. வேறு எந்த நாட்டிலும் அவ்வாறான அமைப்பைப் பார்க்க இயலாது. புதுச்சேரி, காரைக்கால் போய்வந்தவர்கள் அங்குள்ள பிரஞ்சு அமைப்பு வீதிகளைக் கண்டிருக்கலாம். வீதிகள் நேர் நேராக அமைக்கப் பட்டுள்ளன. வளைவான வீதிகளே பெரும்பாலும் இல்லை. சாலைகளும் அப்படித்தான்; வளைவுகள் தேவையான விடத்துப் பெரிய வட்ட அளவில்தான் சாலைகள் திரும்பும். 'பிரஞ்சு வீதியும் பிரிட்டிசு 'நீதி'யும் நேராக இருக்கும்' என்று சொல்வார்கள்.

எங்கும் பல அடுக்குக் கட்டிடங்களே நிறைந்து உள்ளன. இன்னொன்றையும் சொல்ல வேண்டும்; பிரான்சை சிறப்பு நகரம் என்று சொன்னாலும் மிகையாகாது. தெருத்தோறும், கட்டிடங்களின் முகப்புகள், உள் பகுதிகள், சந்துகள், பூங்காக் கள், விடுதிகள்: அலுவலகங்கள், 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்று பாவேந்தர் பாடினாரே, அவர் பிரான்சைப் போய்ப் பார்த்திருந்தால் 'எங்கெங்கு காணினும் சிலைகளடா' என்று பாடியிருப்பார். தப்பித்தவறித் தடுக்கி விழுந்தால் (தடுக்கி விழ அங்கு வாய்ப்பில்லையென்றாலும்) ஏதாவது ஒரு சிலையின் மேல்தான் விழவேண்டும். அவ்வளவு சிலைகள்! சிலைகள்! சிலைகள்! பிரஞ்சுக்காரர்களுக்குத்தான் எத்துணைக் கலை ஆர்வம்! அடடா! நம் ஊரில் உள்ள சிலைகளை ஒன்று மில்லை என்றே சொல்லும்படி அவர்களின் சிலைகள் உயிர் ஓவங்களாகவன்றோ காட்சி தருகின்றன! (தொடரும்)

# அமிர்தலிங்கம் அவர்களையும் பிறரையும் இணைக்கப் பாடுபடுக!

ஆசிரியர்க்கு வெளிப்படையான ஒரு வேண்டுகோள் மடல்!

மதிப்பிற்குரிய ஐயா அவர் களுக்கு,

1-4-84. நாளிட்ட தமிழ் நிலம் படித்தேன். தங்களின் முதல் பக்க வேண்டுகோளில் "அமிர்தலிங்கம்" எனத் தொடங்கி "செயல்பட வேண்டும்" என்பது வரை யிலுள்ள தடித்த எழுத்தில் கூறியுள்ள அனைத்தும் மிக அருமையானவை. இன்று உள்ள நிலையைத்தெள்ளென எடுத்துக் காட்டுவன. இதை விடவும் இன்றைய ஈழச்சிக்கலை மிகச் சரியாகவும் தெளிவாக வும் எவரும் எப்படியும் கூற இயலாது. நெடிது நோக்கும் ஆய்வில் தாங்கள் அன்றே கூறிய நிலைகளுக்குத் திரு. அமிர்தலிங்கனார் உணர்ந்து, வந்திருப்பது உண்மையே ஆனாலும் மிகப் பட்டுப் பார்த்து, உணர்ந்து தெளிந் துள்ள அவரது இவ்விடைக் காலப் போக்கும செயல்களும் நாம் எண்ணியதுபோல் விரை வின்றியும் வேண்டிய வழியில் செல்லாததாகவும் உடனடி இழப்புகளைத் தடுக்காததாக வும் இருந்திருக்கலாம். ஆனாலும் தமிழீழ மக்களின் படிநிகராளியாக இந்தியா மற்றும் அனைத்துலக நாடு களின் தலைவர்களிடமும், மக்களிடமும் தமிழீழம் பற்றிய உண்மைநிலைகளையும், அடிமை நிலைகளையும் எடுத்துக்கூறி அவர்களது ஆதரவையும், கவனத்தையும், கழிவிரக்கத் தையும் தமிழீழ மக்களின் பால் ஈர்க்கச் செய்ததில் அவரது பணி குறிப்பிடத் தக்கதுதானே. மேலும், வெறிச்சிங்களரை தமிழீழச்சிக் கலில் பேச்சுமுறைகளின் உச்ச கட்டமோ இறுதிக் கட்டமோ ஆன வட்டமிசை மாநாடுவரை வரச் செய்ததிலும் அவர் தம் பணி குறிப்பிடத் தக்கதுதான். எனவே உண்மையைப் பட் டறிந்து உணர்ந்துள்ள அவரை இனியும் நாம் ஒதுக்க வேண்டுமா? வருத்த வேண்டுமா? கடிய வேண்டுமா?

முன்பே நம் கடுமை யாவ குற்றச்சாட்டுகளின் விளைவுதானே அவர் நம்மை விட்டு விலக நேர்ந்தது. அதனால் என்ன ஆயிற்று? அரசியல் உண்மையாளரும். அறிவு, ஆக்க நிலைகளில் சரி யான வழிகாட்டத்தக்கவரு மான தங்களை விட்டு அவர் ஒதுங்க வேண்டியது ஆனது எதிலும் அரசியல் ஊதியம் தேடும்புரட்டர்களிடமும், தன் நலத்திற்காக எதையும் செய்யத் தயங்காத இழிவான (கேவலமான) 'தலைவர்' களிடமும் 'பச்சோந்தி' களிடமும் அவர் செல்ல வேண்டியது ஆனது. சிக்கலை யும், விடிவையும் முழுக்க உணர்ந்துள்ள உங்களை விடுத்து அதன் தொடக்கமும் அடிப்படையும் தெரியாத அறிவிலிகளிடம் அவர் செல்ல நேர்ந்ததே. எனவே இப்போது உணர்ந்து, தெளிந்துள்ள, வந்துள்ள அமிர்தலிங்கனாரை நாம் அழைத்து, அணைத்துக் கொள்ள வேண்டும்.

— தொடர்ச்சி 6-ஆம் பக்கம்

**தாழ்ச்சியுறுந் தமிழினத்தின் மேன்மையெலாம்**

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 37 (22-4-84) பகுதி 16-18


## தமிழீழம் அமைய இரண்டே இரண்டு வழிகள் !

தமிழீழத்தில் மீண்டும் கொந்தளிப்பு தொடங்கியுள்ளது. இந்நிலை இன்னும் கொடுமையானதாக மாறலாம். இதை அவ்வளவு எளிதாக எவரும் தடுத்துவிட முடியாது. விடுதலையின் விலை இக் காலச்சூழ்நிலையில் சிறிது கூடுதலாகத்தான் இருக்கும். அறிவியல் முன்னேற முன்னேற மக்கள் மனவியலுக்குக் கொஞ்சம் மதிப்புக் குறையவே செய்யும். அறிவியல், மக்களை 'ஒரு கூட்டம், என்றே மதிப்பிடும். அவர்களின் உணர்வு நிலைக்கு அறிவியல் அத்துணை மதிப்பளியாது. எனவே மக்களின் உரிமை உணர்வுகளை விடுதலை வேட்கைகளைக் கருவிகளாலேயே அரசியலார் ஒடுக்கிவிட முற்படுவர். அரசியலும் அறிவியலும் ஒன்று சேர்ந்ததால் தான் உலகம் அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இத்தகைய காலகட்டத்தில்தான் நம் தமிழீழ விடுதலைப்போராட்டம் நடைபெறுகிறது. என்ன செய்வது? போராடித்தான் தீரவேண்டும்.

இனி இக் காலத்தில், எழும் எந்த ஒரு மக்கள் எழுச்சியையும், அரசியல் சிக்கலாக மாற்றிவிடும் வல்லமை இக்கால அரசியல்காரர்களுக்கு இயல்பாகவே கைவந்த கலையாகப் போய்விட்டது. நமக்கும் எதையும் அரசியல் கண்கொண்டு பார்ப்பதே வழக்கமாகிவிட்டது. உண்மையாகப் பார்த்தால் எல்லாம் அரசியல் தான்! அஃதாவது எதுவும் அரசியலில்தான் போய் முடிய வேண்டும். அதற்காக எல்லாவற்றையுமே அரசியலில் தொடங்க வேண்டும் என்று எண்ணிவிடக்கூடாது. காதல் உணர்வெல்லாம் கலியாணத்தில் போய்முடியும் என்பதால், காதலே கலியாணமாகி விடக்கூடாது. காதலுணர்வு வேறு; கலியாணவுணர்வு வேறு. இரண்டையும் தனித் தனியாகவே சுவைக்க வேண்டும். இதை விட இன்னும் ஒரு விளக்கமான உவமை கொடுத்தால, எல்லார்க்கும் இது விளங்கிவிடும். உலகம் நிலையாமை உடையது தான்; நாம் அனைவரும் என்றேனும் இறந்துவிடப்போவது உண்மைதான். ஆனால், அதற்காக வாழத்தொடங்கும்போதே, அதே சிந்தனையாக நாம் இருந்துவிடக்கூடாது.

இவற்றைப் போன்றதுதான் விடுதலை உரிமை உணர்வும். விடுதலை உரிமைப்போராட்டம் என்பது அரசியலன்று. உணர்வியல்! மன உரிமையியல்! அது வெற்றி பெற்று நாடு கிடைத்த பின்னரே அஃது அரசியலாக மாற வேண்டும். அதுவரை அஃது ஓர் உரிமைப் போராட்டமே! எனவே மக்கள் உரிமை நல நோக்க அடிப்படையிலேயே அது சிந்திக்கப்படவேண்டும். அரசியல் அடிப்படை"யில் சிந்தித்தால் அதற்கு முடிவே ஏற்படாது. தொடங்கிய இடத்திலேயேதான் நாம் நின்று கொண்டிருக்க வேண்டும். திருமணமாகிய மகனும் மகளும், குடும்பத்திலிருந்து பிரிந்து தனியாகப் போய்க் குடித்தனம் நடத்த விரும்புகிறார்களென்றால், அதைக் 'குடும்பம் சுமையானது; பல இடர்ப்பாடுகள் உடையது' என்னும் உலகியல் அடிப்படையில் சிந்திக்கவோ, நம் வல்லமையையெல்லாம், அவர்கள் மேல் பாய்ச்சி அவர்களின் உரிமை வாழ்வு வேட்கைக்குத் தடைபோட்டுவிடவோ கூடாது. 'ஒவ்வொருவரும் உரிமைபெற்று, இன்பம் துன்பம் இரண்டையும் தெரிந்துகொள்ள வேண்டும். விடுதலைக் காற்றை நுகர வேண்டும்' என்னும் மாந்தவியல்—உயிரியல் அடிப்படையிலேயே எவரும் அதைச் சிந்திக்கவேண்டும். கத்தி நம் கையில் உள்ளதால், எல்லாரையும் வெட்டி வீழ்த்தி விடலாம் என்பதும், துமுக்கி (துப்பாக்கி)யை நாம் கையில் எடுத்துக் கொண்டதால், எல்லாரையும் சுட்டுப்பொசுக்கிவிடலாம் என்பதும் அரசியல் அகந்தையே தவிர அரசியல் அறமாகாது. இப்படிப்பட்டவர்களுக்கு இறுதியும் அப்படியே இருக்கும் என்பது வரலாறு. எனவே மக்கள் உரிமை உணர்வை—விடுதலை வேட்கையை — இரக்க உணர்வோடும், வாழ்வியல் அன்பு உணர்வோடும் சிந்திக்க வேண்டும். இக்கால் தமிழீழ விடுதலை உணர்வு யாராலும் இவ்வாறு சிந்திக்கப்படவில்லை. ஆட்சியாளர்களாகிய செயவர்த்தனாவும், இந்திராவும் மட்டுமல்லர், தமிழீழ, தமிழக, அரசியல் தலைவர்களுங் கூட, அதை அரசியலாகவே சிந்திக்கின்றனர். எனவேதான், இவ் விடுதலைப் போராட்டங்கள் தீராத இழுபறிச் சிக்கலாகவே இருக்கின்றன. காலமும், அறிவியல் வளர்ச்சியும் அவர்களுக்குத் துணையும் செய்கின்றன. ஒருவகையில் தூண்டியும் விடுகின்றன.

இந்நிலையில், நம் தமிழகத் தலைவர்களும் இச்சிக்கலைத் தீர்க்க, 'இந்திய அரசே படையனுப்பு' என்றும், 'இல்லையானால் தமிழகர் கிளர்ந்தெழுந்து படை நடத்திச் செல்லும்' என்றவாறு கூக்குரலிடுகின்றனர். இஃது, உண்மையிலேயே அரசியலும் ஆகாது; உரிமை உணர்வியலும் ஆகாது. முதலில், இந்திய அரசு படையனுப்புவதென்பது,என்றைக்குமே நடவாதது. காரணம் தமிழர்களுக்குச் சார்பாகவும், செயவர்த்தனாவிற்கு எதிராகவும் இந்திரா அரசுச் செயல்படவே படாது. ஏனெனில இரண்டு பேருமே தமிழினத்திற்கு எதிரிகள். இதை இன்னமும் விளங்கிக் கொள்ளாமலிருப்பது தான் நமக்கு மிகவியப்பாக உள்ளது. விளங்கிக் கொண்டால், இந்திராவிடம் இன்னமும் நம்பிக்கை வைத்திருப்பதில் பயனே இல்லை. (ஒருவேளை தங்களுக்கு அது பயனளிக்கலாமோ, என்னவோ?) அவர்கள் இரண்டுபேரும் தமிழினத்தையே ஒழித்துக்கட்ட முயலுவார்களே தவிர, காக்க மாட்டார்கள். இனி, இரண்டாவது, அப்படியே, நாம் நினைப்பதற்கு நேர்மாறாக, இந்திரா அரசு இலங்கைக்கு ஓர் ஒப்புரவு (சமாதான) நோக்கத்திற்காக, (அதுவும் தமிழரைக் காக்கும் நோக்கத்துடன் இருக்காது) ஒரு படைப் பகுதியை அனுப்பினாலும், அந்நிலை என்ன விளைவை உருவாக்கும் என்று சொல்லவே முடியாது. அதுவே மூன்றாம் உலகப் போருக்கு அடிகோலினாலும் வியப்பதற்கில்லை. எனவே, இந்த நச்சுத்தேர்வை நம்மினும் மிகுந்த சாணக்கிய அறிவு படைத்த இந்திராகாந்தி செய்யவே மாட்டார். செய்தாலும் அது தமிழினத்திற்கே மேலும் அழிவை உண்டாக்கும்படியே இருக்கும் (இதை நம் அரசியல் தலைவர்கள் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம் )

இவ்விக்கட்டான நிலையில் தமிழீழ வெற்றிக்கு வேறென்னதான் செய்ய முடியும்? அதற்கு, இரண்டே இரண்டு வழிகள்தாம் உண்டு. அவற்றுள் ஒன்று, இந்திராகாந்தி உண்மையாகவே தமிழீழத் தமிழர்கள் மேல் (இங்குள்ள தமிழர்கள் மேல் அன்று) இரக்கம் கொண்டு, அவர்கள் முற்றுமே அழிந்து போய்விடக் கூடாது என்றும், அவர்களும் உரிமை பெற்று வாழட்டும் என்றும் இனிமேல் ஒரு வேளை நினைத்தால், (அவ்வாறு நினைப்பார் என்பது நம் உள்ளத்தில் சிறிதும் படவே இல்லை.) தமிழீழப் போராட்ட இளைஞர் அணிகளின் தலைவர்களை உடனே அழைத்து, அவர்களின் விடுதலைக் கோரிக்கைக்கான உண்மையான காரணங்களை அக்கறையுடனும் அன்புடனும் பரிவுடனும் கேட்க வேண்டும். அத்துடன் அவை செயல் படுத்தக் கூடியதானால், நடுநிலை உள்ளத்துடன் அவற்றைச் சிந்தித்துச் செயலுக்குக் கொண்டு வர வேண்டும். இதை, எந்த வகைப் படையையும் அனுப்பாமலேயே, மிக அமைவாக அவரால் செய்ய முடியும். ஆனால், செய்வாரா என்பதை யாராலும் சொல்ல முடியாது.

இனி, இதை அவர் செய்யாத விடத்து, தமிழீழ விடுதலைக்கென்று உள்ள இரண்டாவது வழி, தமிழீழப் போராளிகளின் கைகளை வலுப்படுத்துவது. அஃதாவது அவர்கள் அறிவியல் நிலையில் மிகு வளர்ச்சி பெற்ற படைக்கருவிகளை வாங்கிக்கொள்வதற்கு நாம் பண வகையில் உதவுவது. அவற்றைக்கொண்டு விடுதலைப்போரை நிகழ்த்தும் வல்லமை-மன உரம்-அவர்களிடம உண்டு. ஆனால், நம்மிடம் அவர்களுக்குப் பொருள் வகையில் உதவி செய்யும், உள்ள ஈரம் இருக்கிறதா? . இருந்தாலும் அதைச் செய்து விடும் துணிவும், துறவுள்ளமும் நமக்கு வருமா? அவர்களுக்காக இரக்கப்படும் நம்மிடம்-நம் தலைவர்களிடந்தான்-கோடி கோடியாகக் குவிந்து கிடக்கிறதே! அவற்றில் பத்தில் ஓரிரண்டு பங்கைச் செலவிட்டாலும் போதுமே! அவர்கள் கைகளைக் கருவிகள் வலுப்படுத்திவிட முடியுமே! ஆனால், நாம்தாம் பேச்சில் வல்லவர்களாயிற்றே உயிரைக் கொடுத்தாலும் கொடுப்போம்; சேர்த்து வைத்த பணத்தைக் கொடுக்க மாட்டோமே! அதைத்தான் நாம் சுவரொட்டிகளாக அச்சிட்டு மாநாடுகளையும் தேர்தல்களையும் நடத்தி, அரசியல் செய்து கொண்டிருக்கின்றோமே! பின் எப்படிக் கொடுப்போம்! எனவே, இந்திராவையே படையனுப்பக் கேட்டுக் கொண்டே இருப்போம், தமிழீழத்தில் கடைசித் தமிழன் இருக்கும் வரை! தமிழனே, வீறு கொண்டு எழு! ஆனால் மடியில் உள்ள பணத்தைக் கை விட்டு விடாதே! நீ அரசியல் பண்ண அஃது என்றுமே வேண்டும்! வாழ்க தமிழ்! வாழ்க வாழ்க தமிழினம்!

## நெஞ்சு நெக்குருகுகிறோம்!

ஈரோடு பெருந்துறைச் சாலையிலுள்ள கவின் மருத்துவமனை உரிமையாளர் பண்டுவர் இளங்கோ அவர்கள் கடந்த மீனம் 1 - (14-3-84) ஆம் நாள் தம் சொந்தப் பணியின் காரணியமாகக் கேரளா சென்றவர் மீண்டு வருகையில், எதிர்பாராத தற்செயல் நேர்ச்சியால் இயற்கையெய்தியது கேட்டு ஈரோட்டு மாநகரத்து மக்களெல்லாம் அரத்தக் கண்ணீர் வடித்தனர். அவர்களின் "கவின் மருத்துவ மனை" இன்று கவினிழந்து காட்சியளிக்கிறது. பல்லாண்டுக் காலமாகத் தனித்தமிழ் ஈடுபாடு கொண்ட ',தென்மொழி" அன்பர் அவர். சீர்திருத்த நெஞ்சுரம் கொண்ட சீர்மையாளர். அறுவைப் பண்டுவ வல்லுநரான அவரின் மறைவு மருத்துவத்துறைக்கு ஒரு பேரிழப்பு. தன்மானத் தொண்டுக்கும், தனித்தமிழ்த் துறைக்கும் உயிரூட்டிக் கொண்டிருந்த தமிழ்க்குடிமகன் ஒருவரை இழந்து தமிழ்த்தாய் கண்ணீர் வடிக்கிறாள். பெரியார் மாவட்ட "உலகத் தமிழின முன்னேற்றக் கழக அமைப்பாளர்" அவர். கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் நடந்து முடிந்த பெரியார் மாவட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழக மாநாடு வெற்றியாக நடந்து முடிந்ததற்குப் பெரும் உறுதுணையாக இருந்த பெருமகனார் அவர். உ.த.மு.க உடன்பிறப்புகளால் அச்செம்மலை ஒருநாளும் மறக்க இயலாது. ஈரோடு இலக்கிய மன்றங்களுக்கும், சீர்திருத்தக் கழகங்களுக்கும், உ.த.மு.க உடன் பிறப்புகளுக்கும் இந்த ஈரோட்டுக் "கொடை வள்ளல்" மறைவு ஒரு பேரிழப்பு. அவரை இழந்து தவிக்கும் பண்டுவர் துணைவியார் அவர்கட்கும், அவர் மழலைச் செல்வங்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் உலகத் தமிழின முன்னேற்றக் கழக உடன் பிறப்புகள் தங்களின் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

புலவர் தி மு. அரசமாணிக்கம்: ஈரோடு வட்டத்தலைவர்,

## அயலகம்வாழ் தமிழர்களின் ஆர்வ மடல்கள்!

அன்புடையீர்,

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடான "தமிழ் நிலம்" கிழமை இதழை, அண்மையில் படிக்கும் வாய்ப்புப பெற்றேன். இன்று, தமிழனின் உயர்வைக் குறிக்கோளாகக் கொண்டு வெளியிடப்பெறும் ஒரு சில உயர்தரமான கிழமை இதழ்களில் ' தமிழ் நிலம்" எனும் தங்களின் கிழமை இதழும் ஒன்று என்பதைப் படித்தறிந்து, நவிலவியலாத உணர்வு கொள்ளுகிறேன். தங்களின் இவ்வுயரிய பணி, தமிழினத்தைத் தன்மான இனமாக்கி, அறிவுத் தெளிவு பெறச் செய்யும் என்பதில் எனக்கு உள்ள நிறைவான நம்பிக்கை உண்டு. வளர்க உங்கள் தமிழ்த் தொண்டு. எழுச்சி பெறட்டும் தமிழ்க்குலம். — செகவீரன். செலாங்கூர். மேற்கு மலேசியா.

அன்புள்ள ஐயா பாவலரேறு அவர்களுக்கு வணக்கமும் நன்றியும் தெரிவித்து பர்மா இரங்கூனிலிருந்து ஆறு. பாரிவளவன் எழுதிய அஞ்சலை: உலகத தமிழின முன்னேற்றக்கழக வெளியீடான 'தமிழ்நிலம்' எனும் கிழமை இதழ் கிடைக்கப்பெற்றுப் பேருவகையுற்றேன. பர்மா நாட்டில் வாழும் என் போன்ற தமிழருக்குத் தனித்தமிழ் நூல்கள் கிடைப்பது மிக மிக அருமை. தங்களின் தனித் தமிழ் ஏடுகளாகிய தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டுப் போன்ற இனமான உணர்ச்சியைத் தூண்டும் முற்போக்கு இதழ்கள், இங்கே பர்மா நாட்டில் தமிழர்களிடையே ஒரு புரட்சியை உண்டாக்கியிருக்கின்றன. மொழி-இனம்-நாடு விடுதலைபெற முழுமூச்சாகத் தம் பேச்சாலும், எழுத்தாலும் சீரிய முறையில் தொண்டாற்றிவரும் ஐயா பாவலரேறு அவர்களின் தமிழ்நலங்காத்திடும், இனங்காத்திடும் அணியில் யானும் ஒருவன் என்று இம்மடல்வழி உறுதி கூறுகின்றேன்.

— ஆறு. பாரிவளவன், இரங்கூன், பர்மா.

— தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் மொழியின் மேன்மை ஒன்றே!

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# திராவிட சமயமும் இந்து சமயமும்!

மு. தெய்வநாயகம், க.மு.

## அடிமைப்பட்ட வரலாறு

இத்தகைய சிறப்பு வாய்ந்த திராவிடஇனம் இன்று அடிமைப்பட்டு, சமயம் அற்றதொன்றைப் போலக் காணப்படக் காரணம் என்ன? என்பது எண்ணிப் பார்க்கத்தக்கது.

தமிழக வரலாற்றில் இடைக்காலத்தில் தமிழன் அல்லாத சாளுக்கியனை முதல் குலோத்துங்கன் பிராமணர்களுடைய உதவியுடன் தன்னைத் தமிழனாகக் காட்டிக்கொண்டு சோழ நாட்டை ஆட்சி புரியத் தொடங்கியதிலிருந்து திராவிட இனம் பட்டபாடுகளை வரலாற்றில் நாம் பார்க்க இயலுகின்றது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் தமிழ்த் துறவியர்களைப் படுகொலை செய்த குகையிடி கலகமும், பிராமணர் சூழ்ச்சியால் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்ட வலங்கை, இடங்கை சாதிப் போராட்டங்களும், திட்டமிட்டுப் பழைய தமிழ் நூல்களுக்கு ஆரியப் போக்கில் உரை வரையப்பட்ட உரையாசிரியர் காலங்களும் (திராவிட மக்கள்) தமிழ் மக்கள் எல்லா உரிமைகளையும் இழந்து அடிமைகளாக்கப்பட்டமையை விளக்கிக் காட்டும் சான்றுகளாக விளங்குகின்றன.

இவற்றிற்குப் பின்னர் வந்த நாயக்கர் ஆட்சிக் காலம் பிராமணர் வல்லாண்மைக்கு நன்கு பயன் பட்டது. அதன் பின்னர் வெளிநாட்டவர் வரவால் உண்டான 'இந்து' என்ற சொல் இன்று வரை தொடர்ந்து திராவிட இனத்தை அடிமைப்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## விடுதலை உண்டா?

இந்து என்ற பெயரால் ஆளுமையையும் உயர்வையும் நுகர்ந்து வருபவர்கள் தங்கள் தலைமை சிதைந்து விடாதபடி கண்ணும் கருத்துமாக எல்லா வகையிலும் முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றனர். அடிமைபட்டுக் கிடக்கும் திராவிடனைக் கொண்டே, எவ்வகையிலாவது (வேறு சமயம் புகுந்தாவது) விடுதலை பெற நினைக்கும் மற்றொரு திராவிடனை ஒழித்துக்கட்டும் முயற்சியைத் திட்டமிட்டுச் செயல் படுத்தி வருகின்றனர். பிறப்பினால் உயர்வு தாழ்வை எதிர்க்கும் சமயங்களை இந்தியாவில் அழித்துவிட, பிராமணர்கள், பயன்படுத்தும் ஆயுதங்களில் சிறந்ததாக R. S. S. இயக்கம் செயல்படுகிறது. R. S. S. இயக்கத்தின் ஒரே குறிக்கோள் பிராமண ஆளுமையை நிலை நிறுத்தி மற்றவர்கள் யாவரையும் அவர்களுக்கு அடிமைப் படுத்துவதும், அதை எதிர்த்து, உலக மக்கள் யாவரும் சமம் எனக் கூறி மக்களை விழிப்படையச் செய்யும் தனி மாந்தர்களை, கட்சிகளை எதிர்த்து அழிப்பதுமாகும். R. S. S.-ஆல் அழிக்கப்பட்ட மாந்தர்களில் மகாத்மா காந்தியும் ஒருவர் எனக் கடந்த கால வரலாறு கூறுவதிலிருந்து எவரையும் அழிக்க அவர்கள் ஆயத்தமாய்ச் செயல் பட்டு வரும் தன்மை வெளிப்படுகிறது.

உலகுக்கெல்லாம் இறையுணர்வை வழங்கிய திராவிட இனம் அதன் தற்போதைய அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் அதன் ஏற்றமிகு வரலாற்றை அஃது அறியவேண்டும். உலக சமயங்களுக்கெல்லாம் தாயாக விளங்குவது 'திராவிட சமயம்' என்பதை அஃது உள்ளபடியே உணரவேண்டும். ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற இந்திய மக்கள் ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு வெளியேற்றியதைப் போன்று, வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்து திராவிடர்களை அடிமைப்படுத்திய ஆரியர்களை வெளியே விரட்ட வேண்டும், என்று நாம் சொல்லவில்லை. ஆளுமை மனப்பான்மையிலிருந்து அவர்கள் விடுதலை பெற்றுத் தவறான கொள்கைகளைக் கைவிட்டு மனந்திருந்தி யாவரும் சமம் என்பதை உணர்ந்து நன்றியுணர்வுடன் இணைந்து வாழ வேண்டும் என்பதையே நாம் வற்புறுத்துகின்றோம்.

## நல்லவர்களும் உண்டு

பிராமணர்களாகப் பிறந்தவர்கள் எல்லாருமே சூழ்ச்சியுடையவர்கள் என்று எண்ண வேண்டாம். நல்லவர்களும் இருக்கிறார்கள். ஆனால் ஆளுமை மனப்பான்மையுடன் செயல்படுகின்றவர்கள் பிடியிலிருந்து இவர்கள் விடுதலையடைய வேண்டும், அல்லவா?

தங்களுக்கு அறிவம் (ஞானம்) கொடுத்தது திராவிட சமயமே என்னும் உண்மையை உணர்ந்து, தாங்கள் வணங்கும் சிவன், மால், உமை, முருகன், ஐயப்பன் போன்றவர்கள் யாவரும் வேத தெய்வம் அல்லாத திராவிடத் தெய்வங்களே என்னும் உண்மையை உணர்ந்து ஒப்புக்கொண்டு, இத்தெய்வ வணக்கத்தைத் தங்களுக்குக் கற்றுக்கொடுத்த திராவிடர்களிடம் நன்றியுணர்வு உடையவர்களாக நடந்து கொள்ள வேண்டுமல்லவா?

உலகுக்கெல்லாம் இறையுணர்வைக் கற்றுக் கொடுத்த திராவிட இனம், தன் ஏற்றமிகு இன வரலாற்றை, வீர வரலாற்றை, அறிவு (ஞான) வரலாற்றை அறிய வேண்டும். தன்னுடைய வரலாற்றை உள்ளபடியே உணர்ந்தவன் அடிமைப் பேராற்றலை உள்ளபடியே உணர்ந்தவன் அடிமைப் படுவது இல்லை. அடிமைத்தளையை உடைத்தெறியும் ஆற்றலைப் பெறுகின்றான். திராவிடசமயத்தை உணர்ந்தவன் யாரையும் அடிமைப் படுத்துவதில்லை, யாருக்கும் அடிமையாக இருக்கப் போவதுமில்லை

## யார் யார் இணையலாம்?

பிறப்பால் தாம் மற்ற எவருக்கும் அடிமைப் பட்டவர் அல்லர் என்பதை உணர்ந்தவர்களும், அடிமைப்பட்டுக் கிடக்கும் திராவிட இன விடுதலைக் காகப் பாடுபட விரும்புகிறவர்களும், திராவிட சமயத்தின் கிளைச் சமயங்களில் ஒன்றைப் பின்பற்றுகிறவர்களும், திராவிட சமயமே உலகப் பெருஞ் சமயங்களின் தாய் என்பதை ஏற்றுக் கொண்டவர்களும் 'திராவிட சமயம்' என்னும் விடுதலைப் பெயரின் கீழ் இணைந்து செயல் படலாம்.

திருநீறு அணியும் சைவ சமயத்தினரும், திருமண் அணியும் வைணவ சமயத்தினரும், தங்கள் சமயப் பெயருடன் எவ்வகைத் தொடர்பும் இல்லாத 'இந்து' என்ற பெயரால் இணைக்கப் பட்டிருப்பதைப் போன்று, திராவிட இன வரலாற்றில் தோன்றிய சமயங்களாகிய வைதிகம், சமணம், பௌத்தம், யூதம், கிறித்தவம், சைவம், வைணவம், இசுலாம் போன்றவை 'திராவிட சமயம்' என்னும் விடுதலைப் பெயரின்கீழ் இணையவேண்டும் அல்லவா?

சைவர், வைணவர் போன்றோர் தங்கள் சமயப் பெயரில் 'சைவம்' எனக் குறிக்காமல் 'இந்து' எனச் குறிப்பிடுவதைப் போன்று திராவிட இன சமயங்களைச் சார்ந்தோர் இனி தங்கள் சமயம் 'திராவிட சமயம்' என்றே குறிப்பிட வேண்டும். அதுவே விடுதலைப் பெயர் ஆகும்:

இந்து என்ற பெயரில் பல்வேறு சமயத்தினரும் தம்தம் சமயக் கொள்கைகளைப் பின்பற்றி வருதலைப் போன்று திராவிட சமயத்தின் உட்கிளைச் சமயங்கள் தங்கள் தங்கள் கொள்கைகளைப் பின்பற்றுவதில் எவ்வகை முரண்பாட்டுக்கும் இடம் இல்லை.

## விடுதலை அறிவிப்பு

பிராமணரல்லாத ஒருவர் தம் சமயம் இந்து எனக் குறிப்பிடும்பொழுது தாம் பரம்பரையாக அடிமைப்பட்டிருத்தலுக்கு முத்திரை போடுகின்றார்.

அதே மாந்தர் தமது சமயம் 'திராவிட சமயம்' எனக் குறிப்பிடும்பொழுது அவருடைய சமய அடிப் படைக் கொள்கையில் எவ்வகை மாற்றமும் இன்றி அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றவரா கின்றார். உலகம் முழுவதும் உள்ளவர்கள் தமது உடன்பிறப்புகளே என்ற உணர்வைப் பெறுகின்றார். குறுகிய வட்டத்திலிருந்து விடுதலை பெற்று மிகப் பரந்த அகன்ற உலகுக்கு உரிமையுடையவராகின்றார். இத்தகைய சிறப்பைத் திராவிட இனம் உலகுக்கு வழங்கியுள்ளது. 'திராவிட சமயம்' இதை உலகுக்கு அறிவிக்கிறது.

வாழ்க திராவிட சமயம்!
வளர்க உடனபிறப்பு உணர்வு!!

—நன்றி. திராவிட சமயம். மலர் 1. இதழ். 1

## ஆசிரியர் பின் குறிப்பு :

இக்கட்டுரை 'திராவிட சமயம்' என்னும் இதழில் வெளிவந்ததாகும். கட்டுரையாசிரியன் கருத்து முழுமையாக அப்படியே (தூய தமிழ்ப் படுத்தம் தவிர) தரப்பெற்றுள்ளது. இதில் சில கருத்துப் பகுதிகள் நமக்கு முற்றும் உடன்பாடில்லை. 'திராவிட சமயம்' என்றழைப்பதை விட 'தமிழ்ச் சமயம், அல்லது 'தமிழர் சமயம்' என்றழைப்பதே, வரலாற்றடிப் படையில் மிகச் சரியானது. தமிழம் என்ற சொல்லையே ஆரியர் திராவிடம் என்று திரித்து வழங்கினராதலின், 'தமிழ்ச் சமயம்' என்று அழைப்பதே மிகப் பொருந்துவதாகும். இந்தியாவில் இந்து என்னும் பெயரால் வழங்கப்பெறும் ஆரியச் சார்புச் சமயத்திற்கு நேர் எதிரானது தமிழ்ச் சமயமே! மேலும் இக் கட்டுரையுள் வைதீகத்தையும் திராவிட சமயத்தில் சேர்க்கலாம் என்பதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். அது மிகவும் தவறாகும். வைதீகம் வேதங்களையும் வருணாசிரமத்தையும் தழுவிய ஆரியரின் கோட்பாடுகளைக் கொண்டதாகும். அதற்கு நேர்மாறானது தமிழ்ச் சமயமாகும்.

இன்னோரன்ன கருத்து மாறுபாடுகள் தவிர, இந்தியாவின் சமய மூலம் தமிழருடையது என்னும் கருத்தைக் கட்டுரையாசிரியர் மிகவும் ஆதரிப்பதால், இக் கட்டுரை மிகவும் பயனுடையதாகும் என்று கருதி இங்கு வெளியிடப் பெற்றது. சமய வரலாற்றைத் தெளிவாக உணர இது துணை செய்வதாகும்.

— ஆசிரியர்

# தமிழகத்தின் இழிநிலை

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. அறிக்கை!

1. தேசிய மொழி 14 என ஒப்புகொண்டு இந்தி மொழிக்கு மட்டும் கோடிக்கணக்கான உருபாவை நடுவண் அரசு செலவு செய்கிறது.

2. தேசியமொழி 14-இல் சேராத 6 ஆயிரம் பேர் மட்டும் தாய்மொழி என ஏற்றுள்ள சமசுக் கிருத மொழியை வளர்க்க பல்கலைக் கழகங்களை அமைத்துப் பலகோடி செலவு செய்யப்படுகிறது. 6 கோடி மக்களின் தாய் மொழியாகிய தமிழ் மொழியை வளர்க்க இலக்கக் கணக்கில் மட்டும் செலவு செய்து வருகிறது

3. 'எக்காரணத்தைக் கொண்டும் தமிழகத்தில் இந்தியைப் புகுத்த மாட்டோம். இஃது உறுதி' என கூறி கொண்டே ஆயத்துறை, தொடர்வண்டி அஞ்சல் நிலையம், வருமானவரி அலுவலகங்கள் ஆகியவற்றில் இந்தியைப் புகுத்திக்கொண்டும், இந்தி படித்தவர்களுக்குதாம் பணி உயர்வு என்று திட்டமிடப்பட்டும் இந்தி புகுத்தப்பட்டு வருகிறது.

4. வானொலியிலும்—தொலைக் காட்சியிலும் வேண்டுமென்றே தமிழ் அழிக்கப்பட்டு வருகிறது. 'சேர்ந்து பாடுவோம்' என்ற தலைப்பை வானொலி நிலையத்தில் புதிதாகப் புகுத்தி, இந்திப் பாடல்களையே ஒலிபரப்பித் தமிழ் மக்களின் காதுகளில் இந்தியைப் புகுத்திக்கொண்டே வருகிறார்கள்.

5. இந்தியன் வைப்பகம் போன்ற தமிழ்நாட்டு வைப்பகங்களில்கூட தமிழ் மக்கள் பணம் கட்டுகிற தாள்களில் கட்டாயமாக இந்தி புகுத்தப்பட்டுத் தமிழ் அழிக்கப்பட்டு விட்டது.

6. சமசுக்கிருத மொழியில் மொழி பெயர்க்கப் பெற்ற ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள் இந்தியாவில் 98 நடந்தும், தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவக் கல்லூரி ஒன்றே ஒன்று அதுவும் தமிழகத்தில் மட்டுமே நடைபெற்று வருகிறது.

7. வடநாட்டுக் கலைகளை வளர்த்துக்கொண்டும் வடநாட்டுக் கலைஞர்களைப் பாராட்டிக் கொண்டும் அவர்களுக்குப் பரிசளித்தும் தமிழ் நாட்டின் கலைகளையும், தமிழ்க் கலைஞர்களையும், இழிவுபடுத்தி வருகிறது.

8. வெள்ளத் துயர்நீக்கத்திற்கும் நெல் விலைக்கும், ஏன் சாப்பாட்டு அரிசிக்கும் கூட வடக்கே போய் அவர்களின் வாயிலில் கையேந்தி நிற்க வேண்டிஇருக்கிறது.

9. சிறிய ஆலைகளைக் கூடத் தொடங்க அவர்களிடம் போய் இசைவு கேட்டு நடத்த வேண்டிய இழிநிலையில் தமிழ்நாடு இருந்து கொண்டு இருக்கிறது.

10. கடற்கரைகளையே பார்க்காத நடுவண் பைதிரம் (மத்தியபிரதேசம்) உத்திரப் பைதிர(பிரதேச) மக்களுக்கு உலகம் முழுவதும் சரக்குகளை ஏற்றுமதி செய்யவும், இறக்குமதி செய்யவும் உரிமங்கள் பல வழங்கப்பெற்று, ஏறத்தாழ 600 கற்கள் கடற்கரைகளை உடைய தென்னகத்திற்கு 100 க்கு ஒன்றிரண்டு மேனி (வீதம்) கூட ஏற்றுமதி இறக்குமதி உரிமம் வழங்கப்படவில்லை.

11. வறுமைக் கோட்டிற்கும் கீழ் 100 க்கு 62 மேனி (வீதம்) வாழ்கின்ற மக்களைத் தமிழ் நாட்டில் மட்டுமே காணமுடிகிறது. வடநாட்டாரின் பகிர்நிலை (சராசரி)வருமானம் 1185 உருபாவாகவும், தமிழ் நாட்டு மக்களின் பகிர்நிலை (சராசரி) வருமானம் உரு. 34 ஆகவும் இருந்து வருகிறது.

12. படித்த பட்டமுடைய இளைஞர்களின் வேலை இல்லாத் திண்டாட்டம் தமிழ்நாட்டில் மட்டுமே அதிகமாக வளர்ந்து கொண்டே வருகிறது.

13. தமிழகத்தின் பழந்தமிழ் மக்கள் ஏறத்தாழ 1 கோடிப்பேர்கள் சேரியிலும் சேற்றிலும் பன்றிகளோடு பன்றிகளாய் வருந்தி வாழ்ந்து கொண்டே இருக்கின்றனர்.

14. கோவில் கட்டியவன் கோவிலுக்குள் போக முடியாத நிலையும், குளம் வெட்டியவன் அதில் தண்ணீர் குடிக்கமுடியாத நிலையும் இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது.

—தொடர்ச்சி 6- ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்மொழி தாழ்ந்தால் தமிழினம் வாழுமோ?

## ஒன்றுபட்டுப் போராடுங்கள்! போராட ஒன்றுபடுங்கள்!

'சாரஉணவுத்திட்டம்' கொண்டு வந்ததில் பெருமைப்பட்டுக் கொள்வதில் ஒன்றுமில்லை. இந்திய அமைப்பில் 'எந்த முறையும்' பழைய 'அடிமை முறை'யினை வளர்க்கவே செய்யும் கல்வித்துறையின் கடைசி அடிமைகள் மாணவர்கள். இத்துறையின இறுதி ஊழியன் ஆசிரியனே!

'வெட்டியான்' அதிகாரந்தான் ஆசிரியர் அதிகாரம். இவர்களை 'மேனிலை'யில் இருப்பவர்களாக 'வாய்ப் பாயாசம்' காய்ச்சிக் கொட்டி மயக்கி வருகின்றார்கள். இதற்கு மயங்கியதால் ஆசிரியர்கள் மேலும் அடிபாதாளத்திற்குத் தள்ளப்பட்டு வருகிறார்கள்!

ஒரு தனியார் பள்ளியின் தலைமையாசிரியர் தமது நாற்காலியில் உட்காரவும் பாதுகாக்கவும் முடியாதவராக உள்ளார். அதே வேளை அவர் உடனாசிரியர்கள் உட்காரும் நாற்காலிகளை எழுந்துநின்றபின் இழுத்து விடவும் முயல்கிறார். இப்படி 'அதிகாரத்தின்' அமைப்பு யாவும் மேல்தட்டு வாணிகர்க்கு உதவுவதாகவே உள்ளது!

'சாரஉணவு' என்ற பெயரில் இளம் பிஞ்சுகளைத் தட்டேந்த, வைத்துள்ள அரசு, தன்னளவிலேயே தனது அதிகாரத்திற்குட்பட்ட மக்களையும் கீழ்மைப் படுத்தி வைத்துள்ளது புலனாகும்!

நாம் அடிமைத்தனத்தைச் சிலந்திவலையாக வைத்துள்ள அமைப்பில் சிக்கி உள்ளோம். ஆகவே, கவனமாக ஒன்றுபடவும் போராடவும் - போராடவும் ஒன்றுபடவுமான முயற்சியில் ஈடுபட வேண்டியவர்களாக உள்ளோம்!

கல் என்ற போதே நாம்
கல் ஆகிப் போன தாலே
நல் வாழ்வை நாமே தொலைத்தோம்;
நாமே மீட்போம்; முன்னே செல்வோம்,
நற்றமிழர் நாமென்ப தாலே இன்றே

— பறம்பை அறிவன்.

## ஆசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள்

அன்புள்ளங்களே, ஆசிரியர்களே உங்களைப் பார்த்து மொழியைப் பேணுங்கள் என்று நினைவு கூட்டும் போது கூச்சமாகவுள்ளது!

குறிப்பாகத் தூயதமிழில் எழுத அறியா விட்டாலும் தாழ்வில்லை. ஆங்கில எழுத்துகளை முன் பின்னாக அச்சிடுவதைக் கைவிடுங்கள். தூய தமிழ் வரிவடிவங்களைக் கையாளுங்கள். தமிழில ஒப்பமிடுங்கள். ஆங்கில மடல்கள் எழுதினாலும் 'தமிழில' ஒப்பம் இடலாம. கையொப்பம என்பது 'இதற்கு என எழுத்து' என்று சான்று பகர்வது தானே.

தூயதமிழைப் பரப்ப முயலுங்கள் அறியாமை குற்றமில்லை. அறிந்தே தமிழின் தன்மைக்கு மாறாக எழுதுவதை இனியும் பொறுத்துக் கொள்ள நற்றமிழர் ஒப்பார்.

ஆசிரியர், தொழிலாளர் இயக்க ஏடுகள் இந்த விருப்பத்தை நிறைவேற்ற முன்வரும் என நம்புகிறோம்.

— பறம்பை அறிவன்

## சலுகை கேட்டு வாழ்வதைவிட உரிமை கேட்டுச் சாவது மேல்!

• 'சலுகை கேட்டு வாழ்வதை விட உரிமை கேட்டுச் சாவது மேல்' என்ற பாரதிதாசன் பாதையில் பாவலர் 'சாதிக் கொடுமைகளைச் 'சாடி'ப் பேசியுள்ளார்.

தமிழினம் ஒன்றுபட நடைமுறைக்கேற்ற கருத் துரையைப் பாவலரிடம் கேட்டறிந்தேன்; பள்ளிகளில் 'சாதிகளை' நேரடியாகக் குறிப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். பிற்படுத்தப்பட்டவர், மலைவாழ்மக்கள், ஒடுக்கப்பட்டவர் என்ற குறிப்பே போதுமானது.

இவன் பள்ளன், இவன் இருளன், இவன் முதலி, இவன் படையாட்சி - என்று சாதியைச் சுட்டுவது தேவையற்றதும் பழிதூற்றுவதும் ஆகும் என்று விளக்கினார்கள்.

சாதிகள் இல்லையடி பாப்பா என்ற பாட்டை முழக்கும் நாம் இதனையும் எண்ணிப் பார்க்க வேண்டும்!

— பறம்பை அறிவன்.

## தமிழ்த்தேசியஇன விடுதலை மாநாட்டு விளக்கப் பொதுக் கூட்டம்-சென்னை.

எதிர்வரும் மே மாதம் 5, 6 ஆகிய இரு நாள்களிலும் பெண்ணாகடத்தில் தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடும், தேசிய இனங்களின் விடுதலை மாநாடும், நடைபெற உள்ளன. இரண்டாம் நாளன்று நடைபெறவுள்ள பெரிய மாநாட்டின் இன்றியமையாமை பற்றிப் பொதுமக்களுக்கு விளக்குவதற்கென, சென்னை மாவட்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தினர், "தமிழ்த் தேசிய இன விடுதலை மாநாட்டு விளக்கப் பொதுக்கூட்டம்" ஒன்றை அண்ணாசாலையில் உள்ள மொழிஞாயிறு ஞா தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டட அரங்கில் கடந்த தி.பி. 2015 மீனம் 11-இல் (காரி-24-3-84) அரிய முறையில் ஏற்பாடு செய்து சிறப்புற நடத்திப் பெரும்பயன் விளைவித்தனர்.

விளக்கப் பொதுக் கூட்டத்தின் தலைவராக தென்மொழி திரு. ப. முருகவேள் அவர்கள் அமர்ந்திருந்தார். தலைவரை முனமொழிந்து தென்மொழி திரு. வியரைசு அவர்களும், வழிமொழிந்து திரு. ஆண்டகை அவர்களும் உரையாற்றினர்.

பின்னர், தலைமையேற்றிருந்த தென்மொழி திரு. ப. முருகவேள் அவர்கள், தமிழ்த்தேசிய இன விடுதலையின் தேவைபற்றிய நிலைகளைச் சுருக்கமாக விளக்கி, நல்ல தலைமையுரையொன்றினை ஆற்றி, விழாவுக்கு உரையாற்ற வந்திருந்த அறிஞர் பெருமக்களைக் கருத்து விளக்கம் தரும்படி ஒவ்வொருவராக அழைப்பு விடுத்தார்.

"தமிழினம் தம் நிலையையும் இக்கட்டையும் தேவையையும் உணராது இப்படியே கிடப்பது கூடாது என்றும், மற்ற உலக இனங்களின் எழுச்சி வீழ்ச்சி நிலைகளைக் கருத்தில் கொண்டு, தம்மைத் தகவமைத்துக் கொண்டு மீட்சி பெறவேண்டும்" - என்றவாறு தென்மொழி திரு. வியனரசு அவர்கள் உரையாற்றினார்.

கடந்த இருபத்தியைந்து ஆண்டுக்காலமாகத் தென்மொழி இதழ் வாயிலாகவும், பன்னூறு உரைப் பொழிவு மூலமாகவும், பாவலரேறு ஐயா அவர்கள் இந்த இனமேன்மைக்கும் மீட்சிக்கும் ஆற்றி வருகின்ற தொண்டுக்குத் தூணாகவும் துணையாகவும் நின்று இனவுணர்வாளர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு பயன்விளைக்க வேண்டுமாய், பண்டாரகர். திரு அரசேந்திரனார் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

அடுத்து உரையாற்றிய தமிழர் முன்னேற்றக் கழகத்தின் செயலாண்மையர் திரு. குரு. இதயமணி அவர்கள். தமிழர்கள் எதற்கெடுத்தாலும் அஞ்சுகின்ற வெற்று மனப்போக்கினராக இருப்பது தமக்கு மன வருத்தத்தை அளிக்கின்றதென்றும் தமிழின மேம்பாட்டுக்கு உழைப்பதாக முழக்கமிடும் அரசியல் தலைவர்கள் பெரும்பாலாரும் உண்மையாகவும் முழுமையாகவும் இல்லாமல், தம் தம் வளநலன்களைக் காத்துக் கொள்ளும் முயற்சியிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர் என்றும், தென்மொழி இதழ் போன்று துணிந்து தம் கருத்துகளை வெளியிட்டு மக்களுக்கு உணர்வு கொளுத்த தமிழினத் தலைவர்கள் முன்வரவேண்டும் என்றும் அரிய உரையொன்றினை அவையோர்க்கு அளித்துக் கலகலப்பூட்டினார்.

உடல்நலக் குறைவினால் தம்மால உரையாற்ற இயலாமைக்குப் பகரமாகத் தம இடத்தை, திரு. நாகராசன் அவர்கள் நிறைவுசெய்வார் என, பொதுமையியல் நூலாசிரியர் திரு. மஞ்ஞை அவர்கள் கூறித் தம் இடம் அமர்ந்ததும், திரு. நாகராசன் அவர்கள் உரையாற்றினார்.

அவருடைய உரைக்குப் பின்னர், புதுச்சேரி வழக்கறிஞர் திரு. ப. அருளி அவர்கள், தமிழினம் நலம் பெற்றுவிடக்கூடாது என்பதிலும் எவ்வகையிலேனும் இனமோ மொழியோ தமிழநாடோ தனிச் சிறப்பு எய்தவோ உணர்வு பெற்று விடவோ கூடாது என்பதிலும் ஆரிய இனத்தவர் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, நம் காலத்திற்குள் தமிழினம் விடுதலை பெற்றே தீருவதற்கு அனைவரும் இவ்வியக்கத்தில் பங்குபற்றிப் பயன் விளைவிக்க வேண்டும் என்று வேண்டினார்.

பின்னர், பொதுமைப் புரட்சியாளரும், தன்னலமற்ற மக்களினத் தொண்டரும், ஈகச்செம்மலும், மார்க்கிய-இலெனினியக் கொள்கைச் செயற்பாட்டாளரும் ஆகிய திருவாளர். கலியபெருமாள் அவர்கள், உலக நடைமுறைப் போங்கிலும் கடந்து வந்த வரலாற்று நிலைகளிலும் தேசிய இனச் சிக்கல் எவ்வெவ்வகையில் தோற்றமெடுத்தது என்பதையும் என்னென்ன சூழல்களில் தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றன என்பதையும், விளக்கமுற ஒப்பிட்டுக் காட்டி, நம் தமிழ்த்தேசிய இனத்திற்கு இக்கால் உள்ள கொடுமையான அடிமை நிலையையும்' அது சூழ்ச்சிக்கு ஆட்பட்டு அல்லலுறும் இரங்கத்தக்க நிலையையும், தமிழினம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளக் கட்டாயமாக அது மீட்சி பெற்றேயாக வேண்டிய தேவையையும் அரிய முறையில் விளக்கி ஆய்வுரையொன்றை நிகழ்த்தினார்.

இறுதியாக, உ.த.மு.க-வின் தலைவர் பாவலரேறு-பெருஞ்சித்திரனார் அவர்கள், மொழியுணர்வு அற்ற நிலையொன்றினாலேயே தமிழினத்திற்கு இவ்வளவு பெரிய வீழ்ச்சி வந்துற்றது என்றும், "தமிழ்" என்னும் மொழியை முன்வைத்தே நாம் நம் இனத்தைப் பற்றிப் பேசவியலும் என்றும், அதனைக் காவாதும் போற்றாதும் உணர்வுறாதும் கிடந்து நம்மினத்தை எவ்வகையாலும் முன்னேற்றிவிடல் இயலாது என்றும், அடிமையாய்க் கிடந்த பல்வேறு இனமக்கள் தம்தம் நிலையுணர்ந்து திரண்டெழுந்து மீட்சி பெற்றும் பெற்றுக்கொண்டும் வருகையில், நாம் மட்டும் அடிப்படை நிலையிலேயே நமக்குள்ளேயே பூசலிட்டு வருகின்றோம் என்றும், எதற்கும் அஞ்சாது துணிவோடு ஒன்றிணைந்து தமிழ்நிலத்தை மீட்சி கொண்டாகவேண்டும் என்றும், அதற்கென உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் வல்லுரத்தொடு பங்காற்றவுள்ளார்கள் என்றும், கூறி, தமிழின வீழ்ச்சிக்குரிய வரலாற்று அடிப்படை நிலைகளைச் சுட்டிக்காட்டி வீறுரையாற்றி அறிவு கொளுத்தினார்.

நிகழ்ச்சியின் முடிவில், தென்மொழி திரு. மா. பொழிலன் அவர்கள், சென்னை மாவட்ட உ.த.மு. கழகத்தினர் சார்பில் அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார்.

பொதுவுடைமையை இம்மண்ணில் செயலாக்கிப் பயன் விளைக்கவேண்டும் என்று உள்ள இயக்கத்தார்களில், மிகவும் நுட்பமாகவும் கூர்மையாகவும் தமிழினத்தின் சிக்கல் நிலையை ஆய்ந்துபார்த்து தெளிந்த முடிவுகளைக் கூறும் திரு. கலியபெருமாள் அவர்கள், இத்தகு தமிழின முன்னேற்ற உணர்வாளர்களிடையே மேலும் நன்கு பிணைந்து செயலாற்றுவது தமிழ் மக்களுக்குப் பெரும்பயன் தருவதாகும் என்று அவையினர் பேசிச்சென்றது இங்குக் குறிப்பிடத் தகுந்தது.



## "தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் : | 1.25 | 3 00 | 3.00 |
| ஆண்டுக் கட்டணம் : | 15 உருபா | 35 உருபா | 35உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 8 ,, | 18 ,, | 18 ,, |



# தமிழ்மொழி சிதைந்தால் தமிழர் உயர்வரோ?

## அருள் உள்ளத்தின் வளர்ச்சி நன்கொடை

சேலம் மாவட்டம், இராசிபுரம் வழக்கறிஞர், உயர் திரு. சி. சுந்தரராசன். க.இ; ச.இ. அவர்களின் துணைவியார் திருவாட்டி தெய்வயானை ஆகியோரின் இரண்டாம் மகன் செல்வன் அருள்முருகனின் இரண்டாம் ஆண்டுப் பிறந்தநாள் வரும் 22-4-84 -இல் வருகிறது. அதன் மகிழ்ச்சி நினைவாக உரு. 200, (உருபா இருநூறு) 'தமிழ்நிலம்' வளர்ச்சி நன்கொடையாக நேரில் வரப்பெற்றோம். திரு.சுந்தரராசன் இணையர் அருள் உள்ளத்தைப் பாராட்டுவதுடன், செல்வன் அருள்முருகன் எல்லா நலமும் பெற்று நீடு வாழ நிறைந்த நெஞ்சுடன் தமிழ்நிலம் வாழ்த்துகின்றது.

## இரங்கல் செய்திகள்.

1. நெடுநாளைய தென்மொழி அன்பரும், தூயதமிழ் உணர்வை நித்தமும் பரப்பி வருபவரும், தனித்தமிழ் எழுத்தாளருமாகிய புலவர். செந்தலை ந கவுதமன். க மு;கல்.இ. அவர்களின் அன்னையார் கடந்த 26-3-84-இல் தஞ்சை மாவட்டம், செந்தலையில் திடுமென இயற்கை எய்தி விட்டார்கள் என்பதறிந்து பெரிதும் வருந்துகிறோம். அன்னையை இழந்து துயருறும் அன்பர்க்கும், அவர் குடும்பத்தினர்க்கும் நம் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. நெடுநாளைய தென்மொழித் தொண்டரும், உ.த.மு.க. மணப்பாறை வட்டக்கிளைச் செயலாளரும், தமிழ்நிலம், தென்மொழி விற்பனையாளரும். நாள்தோறும் அவை தோறும் தனித்தமிழ்ப் பேசும் நற்றமிழ்ப் பாவலரும் ஆகிய புலவர். நாவை. சிவம் இல இ;கல்.இ. அவர்களின் அன்னையார் திருவாட்டி. அகிலாண்டம் வைத்தியலிங்கம் அவர்கள், கடந்த 27-3-84-இல், திருச்சி மாவட்டம், செட்டிகுளத்தை அடுத்த நாட்டார்மங்கலத்தில் சில நாள்கள் உடல் நலிவுற்றிருந்து மறைந்து போனார்கள் என்னும் செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். அன்னையை இழந்து தவிக்கும் அரும்பெறல் ஒரே மகன் புலவர் திரு. நாவை. சிவத்திற்கும் அவர் குடும்பத்தார் அனைவர்க்கும் நம் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## அரசருக்கும் எதிராகக் கிண்டல்!

பிரிட்டிசு பட்டத்து இளவரசர் சார்லசு, தம் மனைவி டயானாவுடன், தம் நாட்டு மகிழுந்துத் தொழிற்சாலை ஒன்றுக்கு அண்மையில் பார்வையிடச் சென்றார்.

அவர் மக்கென்சி என்ற ஒரு தொழிலாளரின் அருகே வந்ததும், "உங்கள் ஆலை நன்றாக வேலை செய்கிறது; உங்கள் உருவாக்க (உற்பத்தி)த் திறன் நன்றாக இருக்கிறது" என்று இளவரசர் பாராட்டினார்.

"தங்கள் உருவாக்க (உற்பத்தி)த் திறனும்தான் நன்றாக நடக்கிறது" என்று அந்தத் தொழிலாளர் உடனே விடையளித்தார்.

உடனே சார்லசு வெட்கத்தால் முகம் சிவந்து, அசட்டுச்சிரிப்பு (இழிசிரிப்பு)ச் சிரித்தார். ஏனெனில் டயானா இரண்டாம் முறையாகக் கருப்பம் அடைந்திருக்கிறார்!

(இந்தியாவில் இந்த மாதிரி ஒரு முகாமையாளரை ஒரு தொழிலாளி நேருக்கு நேர் கிண்டல் செய்தால், அதிலுள்ள 'நகைச்சுவையை'ச் சுவைக்காமல், சினங் கொண்டு பழிதீர்க்கவே முயலுவார்கள் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இஃது ஒரு வேறுபாடுதானே!).

— தினமணி -சிறப்புக்கட்டுரை-6-4-84.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

15. பம்பாயிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டு இருந்த மக்கள் (சனதா) தொடர் வண்டியைக் கன்னட நாட்டுக்குத் திருப்பிவிட்டு விட்டுத் தமிழ் நாட்டிலும் பம்பாய் நகரிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரையும் துன்புறும்படி செய்கிறார்கள்.

16. மானத்தை இழந்தும், பொருளை இழந்தும், உயிரை இழந்தும் 30 கற்கள் தூரத்தில் துடித்துக் கொண்டு இருக்கிற ஈழ மக்களுக்கு ஓர் உதவியும் செய்ய முடியாத இழி நிலையில் வாழ வேண்டி இருக்கிறது.

17. கருநாடகமும் கேரளமும் தமிழகத்திற்கு வரும் நீரைத் தடைப்படுத்திப் பயன்பெற்று வருகின்றன. இந்தியப் பேரரசு 7 ஆண்டுகளாக ஒன்றும் செய்யாமல் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கிறது.

18. நடுவண் அரசின் பொருளுதவியைப் பெறுவதில் தமிழ்நாடு முன்பு 3-ஆவது இடத்தில் இருந்தது. இப்போது அது 13-ஆவது இடத்தில் இருந்து வருந்தி கொண்டு இருக்கிறது.

19. தமிழகத்திலுள்ள இரண்டு பெரும் கட்சிகளாகிய தி.மு.க.வும்—அ.தி.மு.க.வும் பிளவுபட்டு ஒன்றை ஒன்று தாக்கிக்கொண்டு இருப்பதால் தமிழ் அழிகிறது—தமிழ் இனம் ஒழிகிறது-தமிழ்நாடு பாழ்படுகிறது.

20. மாநில ஆட்சிகளைக் கலைக்கும், விளக்கமே இல்லாத சட்டங்களையும் அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு எதிர்க் கட்சிகள் ஆட்சி புரிகின்ற மாநிலங்களை நடுவண் அரசு மிரட்டிக்கொண்டே இருக்கிறது.

இந்த இழி நிலைகளைப் போக்கித் தமிழையும் தமிழ் மக்களையும் தமிழகத்தையும் வாழவைக்க வேண்டுமானால் தி.மு.க—அ தி மு.க ஆகிய இரண்டு பெரும் கட்சிகளும் ஒன்று பட்டுப் போராடியாக வேண்டும். அப்போதும் வெற்றிபெற முடியாமல் போகுமானால் இந்த இரண்டு கட்சிகளும் தமிழகத்திலுள்ள மற்ற 13 கட்சிகளையும் திரட்டி மாநிலத் தன்னாட்சி மாநாட்டையாவது உடனே கூட்டி முடிவெடுத்தாக வேண்டும்.

இந்த மாநாட்டை நடத்த தமிழகத்தின் நடுவில் உள்ள திருச்சியே ஏற்ற இடமாகும். இங்கு நடத்தினால் அரசியல் கட்சிகளைச் சேராத பொது மக்களும் பெரும் பங்கு கொள்வர். ஆகவே இந்த அழைப்பை ஏற்றுக் கொள்கிற அரசியல் கட்சிகளும் அரசியல் கட்சிகளைச் சார்ந்துள்ள அன்பர்களும் பொது மக்களும் தங்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

எல்லோருடைய கருத்துகளையும் அறிந்த பிறகு திருச்சியில் நடைபெற இருக்கிற இம்மாநாட்டின் வரவேற்புக்குழுக் கூட்டத்தை நடத்தும் நாளையும் நேரத்தையும் இடத்தையும் தெரிவிப்பேன்.

திருச்சிராப்பள்ளி
10—3—1984

தங்கள் அன்பிற்குரிய,
கி.ஆ.பெ. விசுவநாதம்

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்புமிகு பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம் பல! 'தமிழ்நிலம்' என்னும் தெவிட்டாத தீந்தமிழ் இதழ் கிடைக்கப்பெற்றேன.

அஃதோடு 'தென்மொழி'—'தமிழ்ச்சிட்டு' இதழ்களும் கிடைக்கப்பெற்றேன். பர்மியத் திருநாட்டில் வாழ்ந்தாலும் மொழி-இனம்-நாடு, என்ற தங்களது கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ உறுதி பூண்டிருக்கிறேன்.உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் உயர்ந்த குறிக்கோள்களுக்குத் தலைதாழ்த்தி வழி நடக்க உறுதியாய் இருக்கிறேன்.

பர்மா நாட்டிலும் 'சாதிச்சங்க'ங்கள் அதிக அளவில் உருவாகி வருகின்றன. பதினெட்டு சாதிச் 'சங்க'ங்கள் ஏற்பட்டுச் 'சாதிப்பேய்' தலை விரித்து ஆடுகிறது. 'தமிழன்' என்று தலைநிமிர்ந்து கூற ஒவ்வொரு தமிழனும் வெட்கப்படுகிறான். கவுண்டர், முதலியார், பிள்ளை, செட்டி, ரெட்டி, நாயுடு என்று கூறுகிறான். ஆகையால் தமிழினப்பற்றும், உணர்ச்சியும் ஏற்பட 'தமிழ்நிலம்' — 'தென்மொழி' இதழ்களைத் தொடர்ந்து அனுப்பிவைக்கும்படியாக அன்புடன் வேண்டுகிறேன்.

— சா. மதியழகன், இரங்கூன், பர்மா.

## அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் நிற்காமல் தொடர்ந்து வெளிவரும் என்றும் அவ்வாறு வருவதற்கு அன்பர்கள் என்ன வகையான முயற்சிகள் செய்ய வேண்டுமென்றும் கடந்த மாதத் தென்மொழி (சுவடி:20,ஓலை:5-6)-இல் ஒரு திட்டம் தெரிவிக்கப் பெற்றுள்ளது.

அத் திட்டத்தை மீண்டும் கீழே தருகிறோம். தென்மொழியும் தமிழ்ச்சிட்டும், நிற்கக்கூடாது என்று விரும்பும் நன்னெஞ்சங்கள், அருள்கனிந்து இத்திட்டத்திற்கு ஒல்லும் வகையால் உதவ வேண்டுகிறோம்.

1. தென்மொழி, தமிழ்ச்சிட்டு படிக்கின்ற ஒவ்வொருவரும் அல்லது இவ்விரண்டு இதழ்களும் தேவை என்று உணர்கின்ற ஒவ்வொருவரும், உடனடியாக ஆளுக்குப் பப்பத்து உறுப்பினர்களை (ஒவ்வொருவரும் அவரவர் படிக்கின்ற இதழ்க்கு)க் கட்டாயம் சேர்த்து உதவுதல் வேண்டும், பத்து உறுப்பினர்களைச் சேர்த்துத் தருபவருக்கு ஓராண்டு உறுப்பாண்மை இலவயமாக அளிக்கப்படும்.

2. 'தென்மொழி'க்கு வாணாள் உறுப்பினர் கட்டணம் உரு. 200; தமிழ்ச்சிட்டுக்கு உரு. 120-. பத்து உறுப்பினர்களைச் சேர்க்க இயலாதவர்கள் அவர்கள் படிக்கின்ற ஏதேனும் ஓரிதழுக்கு ஐந்து வாணாள் உறுப்பினர் கட்டணங்களை வாங்கி அனுப்புதல் வேண்டும். அத்தகையவர்க்கும் ஓராண்டு உறுப்பாண்மை இலவயம்.

3. இத்துடன் தங்கள் ஊரில் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' வரவில்லையானால், அங்கு 10 இதழ்களை வாங்கி விற்குமாறு முறைப்படி முன் பணம் கட்டும் முகவர் ஒருவரை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4. இவையன்றித் தாங்கள் இவற்றின் வளர்ச்சிக்கென விரும்பும் சணிசமான நன்கொடைகளைத் தரவும், இயன்றால் திரட்டி அனுப்பவும் வேண்டும். இந்நான்கு முயற்சிகளையும் தொடர்ந்து ஒரு மூன்று அல்லது நான்கு மாதத்திற்குள் செய்து நிலையைச் சரி செய்தல் வேண்டும்.

போதுமான அளவு நிலை சரிசெய்யப் படாத பொழுது நாம் என்ன செய்வது? எனவே முடிவை அந்த விளைவுக்கே விட்டு விடுவோம். இவ்வகையில் ஈடுபடுபவர்களின் பெயர்ப் பட்டியல் தொடர்ந்து இதழ்களில் வெளியிடப்பெறும்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து,திருவாளர்கள், முகுந்தன்-பிரபாகரன் குழுவினரிடையே பிளவு தோன்றியக் காரணியம், தற்போது வெளிப்பட்டும் பெரும்பாலும் அது முடிந்தும் போய் விட்டது. எனவே நிலைகருதி, காலத்தின் கட்டாயத்தை அவர்கட்கு எடுத்துக்கூற வேண்டும். அவர்களை ஒன்றுபடுத்த வேண்டும். அடுத்து அனைத்து நிலைகளையும் உணர்ந்த, செய்ய வேண்டுவனவற்றையும் புரிந்த திரு. ஈழவேந்தன் குழுவினரையும் திரு. அமிர்தலிங்கம் குழுவினரையும் ஒன்று படுத்த வேண்டும். பின் இந் நான்கு முகாமையான தமிழீழ விடுதலைப் போராளிக்குழுவினரையும் ஒன்றாக்கிச் செயல் படுத்தவேண்டும். இதுதான் தமிழீழத்திற்குத் தேவையான, விடிவு தரக்கூடிய நிலையாகும்.

அதற்குச் செயல்படும் தகுதிவாய்ந்தவர்களில் முதன்மையானவர் தாங்கள்தான். இவ் வினைப்பிற்குத் தாங்கள் செய்யும் முயற்சி, தமிழீழ விடுதலைக்கும் அதையொட்டி வரும் தமிழின நலன்களுக்கும் செய்யும் அரும் பெரும் ஆக்க முழுமையான தொண்டாகும்.

இவர்களை அணுகுவதில், ஒன்றுபடுத்த முயல்வதில் உள்ள வேறுபாடுகளையும் தயக்கங்களையும் கூச்சங்களையும் களைந்து விட்டு, இனநலன் கருதி, உடன் இம் முயற்சியினைத் தொடங்குங்கள். இது வெற்றி பெறக்கூடிய முயற்சிதான். முயற்சி வெற்றி பெற்றால் பெரும் விளைவுகள் நிகழுமே.

"அருமை உடைத்தென்று அசாவாமைவேண்டும்
பெருமை முயற்சி தரும்"- என்பது தாங்கள் அறியாததன்றே. எனவே உடன் தேவையான இவ் வினைப்புப் பணியினைத் தொடங்கிச் செயலாற்றுங்கள் என மீண்டும் மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

— மா. ஆறுமுகம். பல்லடம்

**உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :**

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS(C)/657

அனுப்புதல்:
**தமிழ் நிலம்**
5. அருணாசலத் தெரு.
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5. அருணாசலத் தெரு, சென்னை-5